Delete and use school letterhead

Delete and type date

Delete and type parent/carer name and address

அடுத்த ஆண்டு 7 ஆம் வகுப்பில் இடம்

**PLACEMENT IN YEAR 7 NEXT YEAR**

மாணவர்/மாணவி பெயர்: Delete and type name of student

**Year 7**–ல் சேர்க்கப்படும் ஆண்டு: Delete and type calendar year for placement in Year 7

*பள்ளிச் சேர்க்கை விண்ணப்பம்* திருப்பியனுப்பப்பட்ட நாள்: Delete and type date for return of Application to enrol

உங்களுக்கு உதவி தேவைப்படின் பள்ளித் தொலைபேசி எண்: Delete and type school telephone number

அன்புடைய பெற்றோர்/கவனிப்பாளருக்கு:

மேலே குறிப்பிடப்பட்ட பெயருடைய உங்கள் பிள்ளையை இப் பள்ளியில் **Year 7** -ல் சேர்க்க விருப்பம் தெரிவித்துள்ளமைக்கு நன்றி.

உங்களது விருப்பத் தெரிவிப்பிற்கிணங்க, எமது அடுத்த ஆண்டிற்கான சேர்க்கைப் பட்டியலில் சேர்க்க வேண்டுமெனும் நோக்கத்தில் உங்களது பிள்ளையை நாங்கள் தெரிவு செய்துள்ளோம். நீங்கள் அறிந்துள்ளபடி, சேர்வுக்கென நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்று இப் பள்ளியில் பெறப்படும் வரை உங்களது பிள்ளையின் சேர்வு இறுதி செய்யப்பட இயலாது.

பள்ளிச் சேர்க்கைக்கென சம்பிரதாய விண்ணப்பம் ஒன்றை இட நீங்கள் விரும்பின், தயை செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள *NSW அரசுப் பள்ளியொன்றில் சேர்ப்பதற்கான விண்ணப்பம் (Application to enrol in a NSW government school)* என்ற படிவத்தினை **ஆங்கிலத்தில்** நிரப்பி மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் எனக்குத் திருபியனுப்புங்கள்.

இப் படிவத்திலுள்ள பல பகுதிகள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளதை நீங்கள் காண்பீர்கள். தற்சமயம் உங்கள் பிள்ளையைப் பற்றி எம்மிடமுள்ள தகவல்களாகும் இவை.

1. தயவு செய்து அச்சிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் சோதித்துப் பார்த்து, தேவைப்படும் திருத்தங்களைச் செய்யுங்கள்.
2. இல்லாத தகவல்கள் எதுவுமிருந்தால் தயவு செய்து அதைப் பூரணப்படுத்துங்கள்
3. தயவு செய்து அவசியமான அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளித்து இப் படிவத்தில் நீங்கள் கையொப்பமிடுவதை உறுதிப்படுத்துங்கள்.

தயை கூர்ந்து கவனிக்க:

- உங்களது தொழில் மற்றும் கல்வி பற்றிய கேள்விகள் தவிர அனைத்துக் கேளிவிகளுக்கும் பதிலளிக்க வேண்டியது கட்டாயமாகும்.
- மேலே குறிப்பிட்டுள்ள தேதிக்குள் உங்களது பள்ளிச் சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை நாங்கள் பெறவில்லையெனில் உங்களுக்கு இனி விருப்பம் இல்லை என நாங்கள் அனுமானிப்போம் மற்றும் வேறு மாணவர்கள் விண்ணப்பிக்க அழைக்கப்படுவர்.
- இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பிறகு, நீங்கள் மனம் மாறினாலோ அல்லது உங்களது சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டாலோ மற்றும் பள்ளியில் சேர்க்கும் முயற்சியை நீங்கள் தொடர விரும்பவில்லை என்றாலோ, எமது காத்திருப்புப் பட்டியலில் உள்ள இதர மாணவர்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக கூடிய விரைவில் பள்ளியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களது விண்ணப்பம் முன்னுரிமை அடிப்படையில் மீள்பார்வை செய்யப்பட்டு செயற்படுத்தப்படும். அது ஏற்கப்படின், சேர்க்கையை உறுதி செய்து உங்களுக்கு அதிகாரபூர்வமாகத் தகவல் அனுப்பப்படும். சில சூழ்நிலைகளில், உங்களது விண்ணப்பத்தில் நீங்கள் அளித்துள்ள தகவல்களின் சில அம்சம் குறித்து நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கலாம். அப்படி ஏதும் தேவையிருந்தால் நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம்.

*Application to enrol in a NSW government school* என்ற இப்படிவத்தினை நிரப்புவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் உங்களது உள்ளூர் ஆரம்பப் பள்ளியுடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது எமது உயர்நிலைப் பள்ளிப் பணியாளர் ஒருவருடன் பேசுவதற்காக சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு எம்மைத் தொலைபேசி மூலம் அழையுங்கள். உரைபெயர்ப்பாளர் ஒருவரது உதவி உங்களுக்குத் தேவைப்படின், 131 450 என்ற இலக்கத்தின் மூலம் தொலைபேசி உரைபெயர்ப்புச் சேவையை அழைத்து உங்கள் மொழியில் உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேட்கலாம். உரைபெயர்ப்பாளர் பள்ளியுடன் தொடர்பு கொண்டு உங்களது உரையாடலில் உங்களுக்கு உதவும் பொருட்டு இணைப்பில் காத்திருப்பார். இச்சேவைக்கென உங்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது.

உங்களது உதவிக்கு நன்றி.

உங்கள் உண்மையுள்ள

முதல்வர்
Principal